## மீள் குடியமர்த்தல் அதிகாரசபை - 2012

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மீள் குடியமர்த்தல் அதிகாரசபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

அதிகாரசபைக்கு முன்னைய ஆண்டில் திறைசேரியினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 5,600,000 பெறுமதியான டபல்கெப் வாகனம் அவ்வாண்டில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அப்பெறுமதி மீளாய்வாண்டில் மூலதன மானியமாக கணக்கீடு செய்யப்படாது மிகைவிதிப்பு மானியம் என நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தமை காரணமாக மீளாய்வாண்டின் தேறிய மிகை ரூபா 5,600,000 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணக்கமின்மைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 2007 இன் 09 ஆம் இலக்க மீள் குடியமர்த்தல் அதிகாரசபை அதிகாரச்சட்டம் | |
| (i) I ஆம் பகுதியின் 12 ஆம் பிரிவு | வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் வசித்துவருகின்ற குடிபெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்தி அவர்களது தேவைகளை |

| | |
|---|---|
| | நிறைவேற்றுவதற்காக அப்பிரதேசங்களில் கிளை அலுவலகங்களை நிறுவுவதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) III ஆம் பகுதியின் 20(1) ஆம் பிரிவு | அதிகாரசபைக்கு நிதியமொன்று காணப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான நிதியமொன்றை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(1) ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுடன் வரைபு ஆண்டறிக்கையின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்திருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 4,625,545 மிகையொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 460,091 ஆக காணப்பட்டமையால் நிதிவிளைவுகளில் ரூபா 4,165,454 வளர்ச்சியொன்று காட்டப்பட்டது. முன்னைய ஆண்டில் திறைசேரியிடமிருந்து கிடைத்திருந்த ரூபா 5,600,000 பெறுமதியான டபல்கெப் வாகனம் மீளாய்வாண்டில் வருமானமாக காண்பிக்கப்பட்டிருந்தமை நிதி விளைவுகளின் வளர்ச்சிக்கு பிரதான காரணமாக அமைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

மீளக் குடியமர்த்துகையில் எதிர்நோக்க வேண்டியுள்ள பிரதான பிரச்சினையான உணவு, நீர், சுத்திகரிப்பு வசதிகள், சேதமடைந்த வீடுகளிற்கு நிவாரணமளித்தல், உள்வாரியாக குடிபெயர்ந்த நபர்களிற்கான நலனோம்பல் மற்றும் சுபீட்சம் அடங்கலான மனிதநேய உதவிகளை வழங்குதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் என்பன

மீளக் குடியமர்த்தல் அமைச்சின் பங்குபற்றலுடன் மீளக் குடியமர்த்தல் அதிகாரசபையால் மேற்கொள்ளப்படுகின்றது.

மீளாய்வாண்டில் பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு முடியாமல் போயிருந்தது.

(அ) 2007 இன் 09 ஆம் இலக்க மீள் குடியமர்த்தல் அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் படியான 05 அடிப்படை நோக்கங்களும் 14 செயற்பாடுகளும் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த நோக்கங்களை அடைந்து கொள்ளக்கூடிய விதத்தில் பிரேரணைகளைத் தயாரித்து செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குடிபெயர்ந்து மீளக் குடியமர்த்தப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்காக அம்மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள பிரதேசங்களின் பிரதேச செயலாளர் மட்டத்திலான 06 மாவட்டங்களிற்குரிய தகவல் முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அதிகாரசபையால் அத்தகவல்களைப் பயன்படுத்தி தேவையான வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ‘‘தெற்கின் நட்புறவு வடக்கிற்கு’’ என்ற கருப்பொருளில் தெற்கிலுள்ள ஒரு குடும்பத்தால் வடக்கில் மீளக் குடியமர்த்தப்பட்ட குடும்பமொன்றில் காணப்படுகின்ற குறைபாடுகள் மற்றும் தேவைகளை வழங்கி உதவி செய்யும் நோக்குடன் செயற்திட்டமொன்றை அமுல்படுத்துவதற்கு பிரேரிக்கப்பட்டிருந்த போதிலும், அச்செயற்பாட்டினை மீளாய்வாண்டில் நடைமுறைப்படுத்தவதற்கு அதிகாரசபை தவறியிருந்தது.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2007 இன் 09 ஆம் இலக்க மீள் குடியமர்த்தல் அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் II ஆம் பகுதியிலுள்ள பின்வரும் குறிக்கோள்கள் வெற்றிகரமாக அடையப்பட்டிருக்கவில்லை.

(i) 13 ஆவது பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் குறிக்கோள்

உள்நாட்டில் குடிபெயர்ந்த நபர்கள் மற்றும் அகதிகளை பாதுகாப்பாகவும் கௌரவமாகவும் மீளக் குடியமர்த்தல் அல்லது புதிதாக குடியமர்த்தப்படுவதனை உறுதிப்படுத்தல், மற்றும்

உள்நாட்டில் குடிபெயர்ந்த நபர்கள் மற்றும் அகதிகளை அபிவிருத்திச் செயற்பாட்டிற்கு உள்வாங்கிக் கொள்வதற்காக வசதிகளை வழஙைங்குவதன் ஊடாக அவர்களை மறுசீரமைப்பதற்கும் அவர்களிற்கு உதவிகளை வழங்குவதற்குமாக அந்நபர்களை மீளக் குடியமர்த்தல், புதிதாக குடியமர்த்தப்படுவதனை இலகுபடுத்தல் போன்ற குறிக்கோள்களை அதிகாரசபையின் ஆரம்பம் முதல் வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு தவறவிடப்பட்டிருந்தது.

(ii) 14 ஆவது பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் குறிக்கோள்

அதிகாரச்சட்டத்தின் 14(அ) முதல் (ச) ஆம் உப பிரிவு வரை நிறைவேற்றப்பட வேண்டிய 15 செயற்பாடுகள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2013 திசெம்பர் 20 ஆந் திகதி வரை அந்த எந்தவொரு செயற்பாட்டினையும் வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருந்தமைக்கு எவ்வித சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையின் ஆரம்பம் முதல் வருடாந்த பாதீட்டினால் மீண்டெழும் செலவுகளிற்கு மாத்திரம் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அதிகாரபைக்கு அவசியமான மூலதனச் செலவுகளிற்காக அமைச்சிடமிருந்து நிதிஏற்பாடு கோரப்பட்டிருக்கவில்லை.

## 3.3 பதவியணி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 24 ஆக காணப்பட்டதுடன் அதில் 15 பேர் ஆட்சேர்க்கப்பட்டு வேலைகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த போதிலும், செயலாற்றல் மீதான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையில் 2011 நவம்பர் முதல் கணக்காய்வுத் திகதியான 2013 யூன் 10 ஆந் திகதி வரை பிரதி நிதிப் பணிப்பாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டது.

(இ) அதிகாரசபையின் ஆரம்பம் முதல் பொறியியல் தொழில்நுட்பவியலாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் திட்டமிடல் தொழில்நுட்பவியலாளர் பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்ட போதிலும், அப்பதவிகளிற்காக உத்தியோகத்தர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை அதிகாரசபை நடவடிக்கை எடுக்காதிருந்தமை காரணமாக அதிகாரசபையின்

நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகளை எதிர்பார்த்தவாறு நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியாமல் போனமைக்கு அந்நிலமை காரணமாக அமைந்திருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் தூரநோக்கு மற்றும் செயற்பணியினை நிறைவேற்றிக் கொள்வதற்காக அதிகாரசபையால் 03 ஆண்டுகளிற்கு குறையாத காலத்திற்கு கூட்டிணைந்த திட்டமொன்று தாயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 2012/2013 என்ற வகையில் ஒரு ஆண்டிற்காக மாத்திரம் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

### 4.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

அதிகாரசபையால் 2012 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) திட்டமிடப்பட்ட காலப்பகுதியில் நிறைவேற்றப்பட வேண்டிய நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களுடன் முகாமைத்துவத்தின் பொறுப்புக்களை இனங்கண்டு கொள்ளக்கூடிய விதத்தில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை.

(ஆ) குறித்துரைத்த காலப்பகுதியில் இலக்குகளை நிறைவேற்றுதல் தொடர்பில் செயன்முன்னேற்த்தை நாளதுவரையாக மீளாய்வு செய்வதற்காக போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்காக வடக்கு கிழக்கின் 06 மாவட்டங்களில் இடம்பெயர்ந்த மக்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளை நிறைவேற்றும் நோக்குடன் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் நிதி ஏற்பாடு ரூபா 813.11 மில்லியனாகக் காணப்பட்டது. இருப்பினும், அதற்கான நிதியியைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அதிகாரசபையால் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்திலுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாதிருந்த சந்தர்ப்பங்களில் அது நாளதுவரையாக்கப்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டில் எவ்வித செயற்பாடுகளையும் மேற்கொள்ள முடியாதிருந்தது.

## 4.3 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள்

பணிப்பாளர் சபை 09 உறுப்பினர்களை உள்ளடக்கியிருந்ததுடன் மீளாய்வாண்டில் 06 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் மாத்திரம் இடம்பெற்றிருந்தன. மேலும், 2008 முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலத்தில் ஆண்டிற்கு ஒரு பணிப்பாளர் சபைக் கூட்டம் வீதம் நடாத்தப்பட்டிருந்தன. 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4 ஆம் அத்தியாயத்தின் படி மாதாந்தம் பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் ஊடாக செயலாற்றல் தொடர்பில் மதிப்பீடொன்றை மேற்கொண்டு அதன் நடவடிக்கைகளை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், அதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் பிரேரணைகள் எதுவும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பில் கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக அதிகாரசபையின் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) ஆளணி முகாமைத்துவம்

(ஆ) செலவின முகாமைத்துவம்

(இ) வாகனப் பயன்பாடு